இந்திய உச்ச நீதிமன்றம்

2022ம் வருடம் செப்டம்பர் மாதம் 22ம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் இந்திரா பானர்ஜி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் ஜே.கே.மகேஸ்வரி

உரிமையியல் மேல்முறையீடு எண்.6857/2022

சந்திராபன் (இறந்தவர்) என்பவரின்
வாரிசுகள் மற்றும் பலர் .....மேல்முறையீட்டாளர்கள்

/எதிர்/

சரஸ்வதி மற்றும் பலர் .... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 - இரண்டாவது மேல்முறையீடு - மேல்முறையீட்டாளர் தன்னுடைய 14வது வயதில் தன்னுடைய தாய்மாமாவால் குலவழக்கப்படி தத்தெடுக்கப்பட்டார் - தன்னைத் தத்தெடுத்த தந்தை இறந்தபிறகு மேல்முறையீட்டாளர் அருகிலுள்ள கிராமத்திற்கு இடம்பெயர்ந்து அங்கிருந்தபடி சொத்துக்களைப் பராமரித்து வந்தார் - 1979ம் வருடம் அவரைத் தத்தெடுத்த தாயார் தாவாச் சொத்துக்களை, மேல்முறையீட்டாளர் முதல் மனைவிக்கு தானம் செய்துள்ளார் - தாவாச் சொத்துக்களின் மீதான தன்னுடைய உரிமையை விளம்புவதற்கும் நிரந்த உறுத்துக்கட்டளை கோரியும் உரிமையியல் வழக்கை தாக்கல் செய்திருந்தார் - மேல்முறையீட்டாளர் மேற்படி வழக்கில் தன்னையும், 5 சாட்சிகளையும், தத்தெடுப்பு மற்றும் தாவாச் சொத்துக்களின் மீதான தன்னுடைய உடைமையை நிரூபிக்கும்

பொருட்டு விசாரித்துள்ளார் - விசாரணை நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்தது - முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் மேல் முறையீட்டாளரால் தாக்கல் செய்த மேல்முறையீட்டை அனுமதித்து மேல்முறையீட்டாளர் தத்தெடுக்கப்பட்டுள்ளதால் தாவாச் சொத்தை வாரிசுரிமையின் அடிப்படையில் அடைவதற்கு உரிமை உடையவர் என்று அனுமதித்தது - உயர் நீதிமன்றம் சில பிரச்சனைகளை பரிசீலித்து இரண்டாவது மேல் முறையீட்டை அனுமதித்தது - இம்மேல்முறையீட்டில் சட்டம் சார்ந்த பிரச்சனைகள் முடிவு செய்ய அவசியம் எழவில்லை - பொருண்மைகளின்படி முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் சாட்சியங்களின்றி செயல்படவில்லை என்று முடிவு செய்ய இயலாது - முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பில் தலையிடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை - மேல்முறையீட்டு உரிமை தன்னிச்சையாக எழுவதல்ல, மாறாக சட்டத்தின் அடிப்படையில் எழக்கூடியது - உயர் நீதிமன்றத்தின் முன்பு எழுப்பப்பட்ட வினாக்கள், சட்டம் குறித்து முடிவு செய்ய வேண்டிய வினாக்கள் என்று உச்சநீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்ட சோதனைகளின் அடிப்படையில் அமையவில்லை - முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மீட்டமைக்கப்படுகிறது.

சட்டம் பற்றிய வினா - விளக்கமும், நோக்கமும் - முடிவு செய்யப்பட்டது - சட்டம் குறித்த வினா என்பது விவாதத்திற்கு உட்பட்டதாகவும் - மற்ற நீதிமன்றங்களை கட்டுப்படுத்தக்கூடிய, ஏற்கனவே வேறு நீதிமன்றங்களால் முடிவு செய்யப்படாமலும், அது குறித்து எத்தரப்புக்கு ஆதரவாக பதில் அளிக்கப்பட்டாலும் வழக்கின் முடிவு குறித்த அத்தியாவசிய பொருண்மையை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும் - சட்டம் பற்றிய வினா மேற்படி வழக்கில் முக்கியமானதா என்பது வழக்கிற்கு வழக்கு மாறுபடக்கூடியது

மட்டுமல்லாமல் முக்கியமான பரந்துபட்ட கவனத்தில் கொள்ள வேண்டிய சங்கதி என்னவென்றால் அனைத்து நிலைகளிலும் நீதி வழங்குவதற்கு தேவை மற்றும் வழக்குகளில் தேவையற்ற காலதாமதத்தை தவிர்க்கும் நோக்கம் கொண்டதாகும்.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது

தீர்வு: 1. உயர் நீதிமன்றத்தின் முன்பு சட்டம் பற்றிய வினா எழுப்பப்படவில்லை. கணிசமான சட்டம் பற்றிய வினாவைப் பொருத்து மட்டுமே, பிரிவு 100 உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908ன் கீழ் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட முடியும் [பத்தி 17 மற்றும் 23] [301-A-B; 302E]

2. எழுப்பப்பட்ட ஒரு சட்டம் பற்றிய வினா முக்கியமானதா என்பதை முடிவு செய்வதற்கு அது பொதுமக்கள் நலன் சார்ந்ததா அல்லது நேரடியாகவோ அல்லது கணிசமாகவோ தரப்பினர்களின் உரிமையை பாதிக்கக்கூடியதா, மேற்படி சட்டம் பற்றிய வினா இந்நீதிமன்றத்தால் இறுதியாக முடிவு செய்யப்படாததா என்பதே காரணிகள் ஆகும். மேற்படி வினா ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டிருந்தாலோ அல்லது மேற்படி கேள்வியை முடிவு செய்வதற்கு பொதுவான கோட்பாடுகளை உபயோகிக்க வேண்டிய தேவை இருந்தாலோ அல்லது மேற்படி வினா பொதுவான கோட்பாடுகளை பொருத்திப் பார்க்க வேண்டியதாக இருந்தாலோ அல்லது அபத்தமாக இருந்தாலோ மேற்படி சட்டம் பற்றிய வினாவை, கணிசமான சட்டம் பற்றிய வினாவாக கருத இயலாது [பத்தி 31] [305-F-H]

3. ஒரு வினா கணிசமானது என முடிவு செய்வதற்கு அது விவாதத்திற்கு உட்பட்டதாகவும், மற்ற நீதிமன்றங்களை கட்டுப்படுத்தக்கூடிய ஏற்கனவே சட்டத்தால் முடிவு செய்யப்பட்டதாகவும், தரப்பினர்களின் உரிமை குறித்து பதிலளிக்கப்படுமாயின், வழக்கின் முடிவைப் பொருத்து முக்கியமான பொருண்மையை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும். உயர் நீதிமன்றத்தின் முன்பு முதன்முதலாக எழுப்பப்பட்ட வினாவானது மேற்படி வழக்கின் அடிப்படையான காரணத்தை உள்ளடக்காத சூழ்நிலையில், அது இவ்வழக்கோடு சம்பந்தப்பட்ட சட்டவினா அல்ல. சட்டம் பற்றிய வினா மேற்படி வழக்கில் முக்கியமானதா என்பது வழக்கிற்கு வழக்கு மாறுபடக்கூடியது மட்டுமல்லாமல் முக்கியமான பரந்துபட்ட கவனத்தில் கொள்ள வேண்டிய சங்கதி என்னவென்றால் அனைத்து நிலைகளிலும் நீதி வழங்குவதற்கு தவிர்க்கவியலாத தேவை மற்றும் வழக்குகளில் தேவையற்ற காலதாமதத்தை தவிர்க்கும் நோக்கம் கொண்டதாகும்.[பத்தி 32] [306-A-D]

4. தற்போதைய வழக்கில், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் சாட்சியங்களின்றி செயல்படவில்லை என்று முடிவு செய்ய இயலாது. முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பில் தலையிடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. மேல்முறையீட்டு உரிமை தன்னிச்சையாக எழுவதல்ல மாறாக சட்டத்தின் அடிப்படையில் எழக்கூடியது. உயர் நீதிமன்றத்தின் முன்பு எழுப்பப்பட்ட வினாக்கள் சட்டம் குறித்து முடிவு செய்ய வேண்டிய வினாக்கள் என்று உச்சநீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்ட சோதனைகளின் அடிப்படையில் அமையவில்லை. இந்த இரண்டாவது மேல்முறையீட்டில் கணிசமான

சட்டம்பற்றிய வினாவை முடிவு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.[பத்தி 34, 36 மற்றும் 37] [307-D, F-H]

சர் சன்னிலால் வி லால் மேத்தா அன்ட் சன்ஸ் /எதிர்/ செஞ்சுரி ஸ்பின்னிங் அன்ட் மேனுபேக்சுரிங் கம்பெனி லிமிடெட், AIR 1962 SC 1314:[1962] Suppl. SCR 549; ஹீரோ வினோத் /எதிர்/ சேஷம்மாள் (2006) 5 SCC 545:[2006] 2 Suppl. SCR 79 மற்றும் சந்தோஷ் ஹசாரி /எதிர்/ புருசோத்தம் திவாரி (2001) 3 SCC 179 : [2001] 1 SCR 948 – காட்டப்படுகிறது.

எச்.பி. பையாரீஜன் /எதிர்/ தாசப்பா(மாண்டவர்)என்பவரின் வாரிசு தாரர்கள் மற்றும் பலர் (2006) 2 SCC 496 : [2006] 2 SCR 120; ராம்பிரசாத் ராஜக் /எதிர்/ நந்தகுமார் அன்ட் பிரதர்ஸ் மற்றும் பலர் (1998) 6 SCC 748 : [1998} 1 Suppl. SCR 12, சிட்டிஷ் சந்திரா புர்கைத் /எதிர்/ சந்தோஷ்குமார் புர்கைத் மற்றும் பலர் (1997) 5 SCC 438 [1998] 1 Suppl. SCR 1, ரிம்மலபுடி சுப்பாராவ் /எதிர்/ நூனி வீரஜு மற்றும் பலர் AIR 1951 Mad 969 – குறிப்பிடப்படுகிறது.

<u>வழக்கு சட்ட குறிப்பு</u>

[2006] 2 உச்ச நீதிமன்ற குறிப்பு 120 பத்தி குறிப்பிடப்படுகிறது 23

[1998] 1 துணை உச்ச நீதிமன்ற குறிப்பு 12 பத்தி குறிப்பிடப்படுகிறது 24

[1998] 1 துணை உச்ச நீதிமன்ற குறிப்பு 1 பத்தி குறிப்பிடப்படுகிறது 25

[1962] துணை உச்ச நீதிமன்ற குறிப்பு 549 பத்தி காட்டப்படுகிறது 27

[2006] 2 துணை உச்ச நீதிமன்ற குறிப்பு 79 பத்தி காட்டப்படுகிறது 29

[2001] 1 உச்ச நீதிமன்ற குறிப்பு 948 பத்தி காட்டப்படுகிறது 32

பாம்பே உயர்நீதிமன்ற அவுரங்காபாத் கிளையின் இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு எண்.45/1995ன் 11.01.2016ம் தேதியிட்ட உத்தரவில்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: உரிமையியல் மேல்முறையீடு வழக்கு எண்.6857/2022

இரண்டாவது மேல்முறையீட்டு எண் 45 / 1995-யில் பம்பாய் உயர் நீதிமன்றத்தின் அவுரங்காபாத் கிளை வழங்கிய 11.01.2016 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து,

மேல்முறையீட்டாளருக்காக - வழக்கறிஞர்கள் சந்தீப் சுதாகர் தேஷ்முக் மற்றும் நர்ஹரிசிங்

எதிர் மனுதாரர்களுக்காக - வழக்கறிஞர்கள் உதய் பி. துபே மற்றும் காஷ்டப் துபே

மாண்புமிகு நீதியரசர் இந்திராபானர்ஜி அவர்களால் இத்தீர்ப்புரை பகரப்படுகிறது.

1. அனுமதி அளிக்கப்பட்டது.

2. இம்மேல்முறையீடு இவ்வழக்கின் மேல்முறையீட்டாளர் சந்திராபன் (அவர் இறந்ததற்கு பிறகு அவரது சட்டப் பிரதிநிதிகளால் வழக்கு பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது) என்பவரால் தாவாச் சொத்தில் தன்னுடைய உரிமையயை விளம்புகை செய்யவும், நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும் தாக்கல் செய்யப்பட்டிருந்த அசல்

வழக்கு எண் 198/1979 தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் உரிமையியல் மேல்முறையீடு எண் 361/84யை தாக்கல் செய்து, அதில் 10.11.1994 தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் பாம்பே உயர்நீதிமன்றம் அவுரங்காபாத் கிளையில் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டு எண் 45/1995யை தள்ளுபடி செய்து 11.01.2016ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. அசல்வாதியின் தாத்தா சம்பாஜி, சந்திராபன்னுக்கு பாலிராம் மற்றும் ராம்பாவ் ஆகிய இரண்டு மகன்கள். சம்பாஜியின் இரண்டு மகன்களில் பாலிராம் மூத்தவர். 1வது பிரதிவாதி யமுனாபாய் மேற்படி பாலிராமின் மனைவி.

4. பாலிராம் மற்றும் யமுனாபாய்க்கு குழந்தைகள் ஏதும் இல்லை. பாலிராமின் இளைய சகோதரர் ராம்பாவுக்கு திகம்பர் மற்றும் சந்திராபான் (அசல்வாதி) என்ற இரண்டு மகன்கள்.

5. பாலிராம் மற்றும் யமுனாபாய்க்கு குழந்தைகள் இல்லாததால் இவ்வழக்கின் அசல் வாதியான சந்திராபானை தத்தெடுக்க முடிவு செய்தார்கள். மேற்படி சந்திராபான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு பாலிராமின் இளைய சகோதரர் ராம்பாவின் மகன் ஆவார். பாலிராம் மற்றும் ராம்பாவ் ஆகியோர் சந்திராபானை, பாலிராம் (அசல்வாதி) தத்தெடுப்பதற்கு ஒப்புக் கொண்டார்கள்.

6. இவ்வழக்கின் வழக்குரையில், அசல்வாதி சந்திராபான் அவரது பெரியப்பா பாலிராம் என்பவரால் குலவழக்கப்படி அவர்களது உறவினர்கள், நண்பர்கள் மற்றும்

அக்கம் பக்கத்தவர்கள் முன்னிலையில் நடத்தப்பட்ட ஒரு விழாவில் தத்தெடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரின் வழக்கின்படி அவரது பெரியப்பா பாலிராமால் தத்தெடுக்கப்பட்டபோது வாதி சந்திராபானுக்கு 14வயது என்றும், மேற்படி பாலிராம் அவருடைய தத்து தந்தை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. வாதியைத் தத்தெடுத்த 6 மாதங்கள் கழித்து 1951ம் வருடம் மேற்படி பாலிராம் தனது சொத்துக்களைப் பொறுத்து எந்தவிதமான ஆவணங்களும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார். அவரது இறப்பிற்குப் பிறகு அசல் வாதி பக்கத்து கிராமத்திற்கு இடம் பெயர்ந்து அங்கிருந்து பாலிராம் விட்டுச் சென்ற சொத்துக்களை நிர்வகித்து வந்தார். இரண்டாவது பிரதிவாதி சம்பாபாய் அசல் வாதி சந்திராபன்னின் முதல் மனைவி ஆவார். 1979ம் வருடம் பாலிராமின் மனைவியான 1வது பிரதிவாதி யமுனாபாய் தாவாச் சொத்துக்களை வாதியின் மனைவியான சம்பாபாய்க்கு தானம் செய்து வைத்தார்.

8. 08.05.1979ம் தேதி அசல் வாதி மகாராஷ்டிரா, பீட், முதுநிலை டிவிஷன், உரிமையியல் நீதிமன்றத்தில் உரிமையியல் அசல் வழக்கு எண்.198/1979 என்ற வழக்கை பாலிராமின் மனைவியான 1வது பிரதிவாதிக்கு எதிராகவும், தன்னுடைய முதல் மனைவியான சம்பாபாய்க்கு எதிராகவும், தாவாச் சொத்துக்களில் தன்னுடைய உரிமையை விளம்புகை செய்யவும், நிரந்தர உறுத்துக் கட்டளை கோரியும், பிற பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்தார். அசல் பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் அசல் வாதி பாலிராமால் தத்து எடுக்கப்படவில்லை என்று தங்களது எதிர் வாதத்தை தாக்கல் செய்தார்கள்.

9. இவ்வழக்கின் 1 முதல் 4 எதிர் மனுதாரர்கள் மேற்படி வழக்கின் 3 முதல் 6 பிரதிவாதிகளாக இருந்து 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் நிலையை ஏற்றுக்கொண்டு எதிர் வழக்குரை தாக்கல் செய்திருந்தார்கள்.

10. இவ்வழக்கின் வாதி தத்தெடுப்பை உறுதி செய்யும் வகையில் அதை நடத்தி வைத்து பூசாரியான யோகிராஜ் சுவாமி என்பவருடன் 5 பேரையும் சேர்த்து தன்னையும் ஒரு சாட்சியாக மேற்படி வழக்கில் விசாரித்தார். அசல்வாதி தாவாச் சொத்துக்களில் தன்னுடைய உடமை மற்றும் தான் அதில் விவசாயம் செய்து வருவதை உறுதி செய்யும் வகையில் சாகுராவ் துளசிராம்தாஸ் என்பவரையும் ஒரு சாட்சியாக விசாரித்தார். மாறாக எதிர் தரப்பில் அசல்வாதி சட்டப்படி பாலிராம் என்பவரால் தத்து எடுக்கப்படவில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் இரண்டாவது பிரதிவாதி சம்பாபாய் மற்றும் பலர் விசாரிக்கப்பட்டார்கள்.

11. 31.07.1984 தேதியிட்ட தன்னுடைய தீர்ப்பின் மூலம் மகராஷ்டிரா, பீட், ஜீனியர் டிவிஷன் உரிமையியல் நீதிபதி அசல் வழக்கு எண்.198/1979யை தள்ளுபடி செய்தார்.

12. 05.11.1984ம் தேதி முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் என்ற அடிப்படையில் வாதி உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.361/1984 என்ற வழக்கை மகாராஷ்டிரா, பீட், முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். 10.11.1994ம் தேதியிட்ட தீர்ப்பின்படி முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு 361/1984யை அனுமதித்ததன் வாயிலாக

31.07.1984ம் தேதியிட்ட விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றியமைத்ததால் அசல் வழக்கு எண்.198/1979 தள்ளுபடி செய்யப்பட்டது.

13. முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் தன் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை வரிசையிட்டு அசல்வாதி பாலிராமால் தத்தெடுக்கப்பட்டவர் என்றும், எனவே அவர் மேற்படி பாலிராமின் இறப்பிற்கு பிறகு அவரது சொத்துக்களை வாரிசுக்கிரம அடிப்படையில் அடைவதற்கு உரிமை உடையவர் என முடிவு செய்தது.

14. தாவாச் சொத்துக்களை வழக்கு நிலுவையில் இருந்தபோது கிரையம் செய்தவர்களான 1 முதல் 4 எதிர் மனுதாரர்கள், அசல் வழக்கில், 3 முதல் 6 பிரதிவாதிகளான, பாம்பே உயர் நீதிமன்றம், அவுரங்காபாத் கிளையில் இரண்டாவது மேல் முறையீட்டு எண் 45/1995யை தாக்கல் செய்தார்கள். 1 மற்றும் 2 வது அசல் பிரதிவாதிகள் முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவை எதிர்க்கவில்லை.

15. உயர்நீதிமன்றம் இரண்டாவது மேல்முறையீட்டை ஏற்றுக் கொண்டு ஆழ்ந்த விசாரணைக்கு பிறகு 11.01.2016ம் தேதியன்று வழங்கிய தீர்ப்பை எதிர்த்து இந்த மேல்முறையீடு எங்கள் முன்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

16. உயர்நீதிமன்றம் கீழ்க்கண்ட எழுவினாக்களை பரிசீலித்துள்ளது.

(i) 1ம் பிரதிவாதி பாலிராம் இறப்பிற்கு பிறகு சர்வே எண்.86/1, சர்வே எண்.100/3 மற்றும் 109/2 விவசாய நிலங்களைப் பொறுத்து ஏற்படுத்திய உரிமை மாற்றங்களை வாதி தன்னுடைய வழக்கில் கேள்விக்கு

உட்படுத்தாததை பரிசீலிக்காததால் முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு குறையுற்றதா?

(ii) பாலிராம் இறப்பிற்கு பிறகு வருவாய் ஆவணங்களில் 1வது பிரதிவாதியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதையும், அசல் வாதியின் பெயர் சேர்க்கப்படாததையும் பரிசீலிக்காததால் முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு குறையுற்றதா?

(iii) பாலிராம் இறந்தபிறகு அவர் விட்டுச் சென்ற நிலங்களைப் பொறுத்து வாதி வருவாய் ஆவணங்களில் உரிமையாளராக காட்டப்படாததால் கூட்டுறவு கடன் சங்கம் அவருக்கு கடன் வழங்க மறுத்துள்ளதையும், ஆனால் 1ம் பிரதிவாதி கடனைத் திரும்ப செலுத்தியிருப்பது குறித்து தனது கவனத்தைச் செலுத்தாததால் முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு குறையுற்றதா?

(iv) இவ்வழக்கின் வாதி தன்னுடைய தந்தையின் பெயர் ரம்பாவ் என்று எல்லா இடங்களிலும் பயன்படுத்தியதையும், தனது தந்தை பெயராக பாலிராம் என்று எந்த இடத்திலும் கூறாததையும் குறித்து தகுந்த முக்கியத்துவம் கொடுக்காததால் முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் தவறிழைத்துள்ளதா?

(v) தத்தெடுப்பு குறித்து தகுந்த விவரங்களை வாதுரையில் குறிப்பிடாததாலும், அது குறித்த சாட்சியங்களில் நிலையற்ற தன்மை இருப்பதாலும் தத்தெடுப்பு

என்ற பொருண்மை குறித்து போதுமான சாட்சியங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று முடிவு செய்ய இயலுமா?

17. உயர் நீதிமன்றத்தின் முன்பு கணிசமான சட்டம் குறித்த வினா எழுவில்லை என்று நாங்கள் கருதுகிறோம்.

18. வழக்கு விசாரணையின்போது சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. அசல் வாதி தன்னையும், தன்னுடன் சேர்த்து ஐவரையும் சாட்சியங்களாக விசாரித்துள்ளார். அசல் வாதி தத்தெடுப்பைப் பொறுத்து சாட்சியம் அளித்துள்ளார். இரண்டாவது சாட்சியான அசல்வாதியின் சகோதரர் திகம்பர் மனைவி திருவேணிபாய், ராம்பாவின் வீட்டில் தத்தெடுப்பு நிகழ்ச்சி நடந்ததாக குறிப்பிட்டுள்ளார். மேலும் பாலிராமின் இறுதிச் சடங்குகளை அவரது தத்தெடுக்கப்பட்ட மகன் என்ற முறையில் இவ்வழக்கின் வாதி செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மற்ற சாட்சிகளும் இவ்வழக்கின் அசல் வாதி சந்திராபான் பாலிராமுக்கு தத்துக்கொடுக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளனர். வாதியின் வாதத்தை அவரது சாட்சியத்தில் இருந்த முரண்பாடு மற்றும் நிலையற்ற தன்மை காரணமாக விசாரணை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

19. தத்தெடுப்பின் முக்கிய நிகழ்வான தத்துக் கொடுப்பது மற்றும் தத்து எடுப்பது ஆகிய பொருண்மைகள் நிரூபிக்கப்படவில்லை என்று விசாரணை நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

20. முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் சாட்சியங்களை மறுபரிசீலனை செய்து தத்தெடுப்பு நிகழ்ச்சி 1950ம் ஆண்டு நடந்துள்ளதாலும், அதற்கு 34 ஆண்டுகள் கழித்து 1984ம் வருடம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டிருப்பதாலும், சாட்சியங்களில் முரண்பாடுகள் மற்றும் நிலையற்ற தன்மை ஆகியவை ஏற்படுவது இயற்கையானது என்று முடிவு செய்தது. எனவே சாட்சியத்திலிருக்கும் சில நிலையற்ற தன்மைகள் இயற்கையானவை.

21. அசல் வாதி சந்திராபன், பாலிராமின் தத்தெடுப்பு மகன் தான் என்பதை முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் கீழ்க்கண்ட காரணங்களின் அடிப்படையில் முடிவு செய்தது.

(i) அசல்வாதியின் மூத்த சகோதரர் திகம்பரரின் மனைவி திருவேணிபாய் (வா.சா.2)ன் சாட்சியம்.

(ii) தத்தெடுப்பு நிகழ்வை முன்னிருந்து நடத்திய பூசாரி பிரபு யோகிராஜ் சுவாமி (வா.சா.6) என்பவரின் சாட்சியம்.

(iii) வா.சா.6 தங்களுடைய குடும்பத்தில் நடக்கும் குலவழக்கப்படியான நிகழ்வுகளை நடத்தி வைக்கும் குடும்ப பூசாரி என கொடுக்கப்பட்ட ஒப்புதல் சாட்சியங்கள்.

(iv) அசல்வாதி, பாலிராமின் வீட்டில் குடியிருக்கிறார் என அளிக்கப்பட்ட சாட்சியங்கள்.

(v) 1960 – 61 வருடத்திய கோப்புகள் மற்றும் ஆவணங்களில் அசல் வாதி சந்திராபன் பெயர் சந்திராபன் பாலிராம் என பதிவாகியுள்ள குறிப்புகள்.

(vi) அசல்வாதியின் முதல் மனைவி சம்பாபாய் அசல் 1ம் பிரதிவாதி யமுனாபாயுடன் குடியிருந்து வருகிறார் என்ற பொருண்மை.

(vii) ராம்பாவின் சொத்துக்களைப் பொறுத்து திகம்பர் என்பவர் மட்டுமே வாரிசு அடிப்படையில் பெற்றுள்ளார் என்பதும், வாதி மேற்படி சொத்துக்களை எந்தவிதமான பங்கும் பெறவில்லை என்ற பொருண்மை.

(viii) வா.சா.7ஆக விசாரிக்கப்பட்ட குர்கான் சங்க செயலாளராக 1961 முதல் 1963 ஆக இருந்த பன்சிஹாஜ்வே தன்னுடைய சாட்சியத்தில் தன்னுடைய கோப்பில் வ.எண்.35 எண்ணில் சந்திராபான் பாலிராம் என்ற பெயரில் விவசாய கடன் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி கோப்பில் உள்ள குறிப்பின்படி சந்திராபன் பாலிராம் 31.07.1961ம் தேதி ரூ.150/-யை கடனுக்காக திரும்ப செலுத்தியுள்ளார்.

22. அசல்வாதி, சிவ்கங்கா என்பவரை மறுதிருமணம் செய்து கொண்ட பிறகும் முதல் மனைவியான சம்பாபாய் அசல் வாதியுடன் குடியிருந்து வந்ததாக தன்னுடைய சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி சம்பாபாய், அசல்வாதி, சிவ்கங்கா மற்றும் தானும் ஒன்றாக குடியிருந்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார். சந்திராபான் என்ற பெயருக்கு பிறகு ராம்பாவ் என பயன்படுத்தாமல் தன்னுடைய தந்தை பெயராக பாலிராம் என்ற

பெயர் பயன்படுத்தப்பட்டிருப்பது, மேற்படி பாலிராம் சந்திரபானை தத்தெடுப்பு செய்துள்ளார் என்பதை அனுமானிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

23. கணிசமான சட்ட வினாக்கள் இருந்தால் மட்டுமே உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 100ன் கீழ் தாக்கல் செய்யப்படும் இரண்டாம் மேல்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது. எச்.பி. பையாரீஜன் /எதிர்/ தாசப்பா (இறந்தவர்) என்பவரின் வாரிசுதாரர்கள் மற்றும் பலர்[(2006) 2 எஸ்.சி.சி. 496] *என்ற* வழக்கில் இந்த நீதிமன்றம்:-

> "16. எங்களது கருத்தின்படி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு குறையுள்ளதாகும். மேற்படி தீர்ப்பு உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதாகும். உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 100ன்படி உயர் நீதிமன்றங்கள் விசாரணை நீதிமன்றங்களின் தீர்ப்பில் உள்ள கணிசமான சட்ட எழுவினாக்களைப் பொறுத்து தீர்மானிப்பதற்கு மட்டுமே அதிகார வரம்பு கொண்டவை. பொருண்மை குறித்த வினாக்களைப் பொறுத்து மீண்டும் சாட்சியங்களை பரிசீலிக்க அவை அதிகார வரம்பு கொண்டவை அல்ல((பார்வை: பஞ்சுகோபால் பாரு /எதிர்/ உனேஷ் சந்திர கோசுவாமி [(1997)4 SCC 713] மற்றும் சிட்டேஷ் சந்திர புர்கித் /எதிர்/ சந்தோஷ்குமார் புர்கித் [(1997) 5 SCC 438])). உயர்நீதிமன்றம் எந்த சாட்சியம் குறித்தும் விவாதிக்கவில்லை. கீழமை நீதிமன்றங்களின் முடிவுகள் தகுந்த காரணத்திற்காகவோ அல்லது எதிரான காரணத்திற்காகவோ மாற்றப்படவில்லை. ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கான தயார் நிலை

மற்றும் விருப்பம் ஆகியவை சட்டம் மற்றும் பொருண்மை கலந்த பிரச்சனையாகும். பிரிவு 16(1)(c)ன்படி ஒப்பந்தம் தொடர்பான குறித்தவகை நிவாரணம் கோரி தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் வாதி மேற்படி ஒப்பந்தத்தில் தன்னுடைய பங்கை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தத்தால் வேறு வகையில் தடை செய்யப்பட்டிருந்தாலோ அல்லது பிரதிவாதியால் கைவிடப்பட்டு இருந்தாலோ தவிர, எப்போதும் தயாராகவும், விருப்பத்துடனும் இருந்தார் என்பதை நிரூபிக்கவேண்டிய கடமை உடையவர்".

24. ராம்பிரசாத் ராஜக் /எதிர்/ நந்தகுமார் அன்ட் பிரதர்ஸ் மற்றும் பலர் [(1998) 6 எஸ்.சி.சி. 748] என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் "உரிமையியல் நடைமுறை சட்டப்பிரிவு 100ன் கீழ் உயர் நீதிமன்றங்கள் தங்கள் நடவடிக்கைகள் துவங்கியவுடன் மேற்படி சட்டப்பிரிவில் உள்ள கட்டுப்பாடுகள் செயல்பட துவங்கிவிடுகின்றன. உயர் நீதிமன்றங்கள் மேற்படி இரண்டாம் மேல்முறையீட்டில் கணிசமான சட்ட வினாக்கள் முடிவு செய்யப்பட வேண்டியுள்ளதா என்பதை கவனிக்க வேண்டும். கணிசமான சட்ட வினாக்கள் இல்லாத சூழ்நிலையில் மேற்படி இரண்டாம் மேல்முறையீடுகளை அதன் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்ய உயர் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இல்லை".

25. சித்திஷ் சந்த்ரா புர்கித் /எதிர்/ சந்தோஷ்குமார் புர்கித் மற்றும் பலர் [(1997) 5 எஸ்.சி.சி. 438] என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 100யை செயல்படுத்துவதற்கு கணிசமான சட்டப்பிரச்சினை இருக்க வேண்டியது அவசியமானது எனக் குறிப்பிட்டுள்ளது.

26. மேற்சொன்ன சித்திஷ் சந்த்ரா புர்கித் என்ற வழக்கில் இந்த நீதிமன்றம்

"**10.** நாங்கள் கீழ்க்கண்டவற்றை இணைக்க விரும்புகிறோம். (a) வழக்கின் ஆரம்ப நிலையிலேயே உயர் நீதிமன்றம் சட்டம் பற்றிய பிரச்சினையை முடிவு செய்ய வேண்டும் மற்றும் (b) விதிவிலக்கான வழக்குகளில் பின்னிட்டு உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 100(5) ன் கீழான அதிகார வரம்பை செயல்படுத்த விரும்பினால் அது குறித்து எதிர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுத்து அது குறித்து எதிர் வழக்காட அவர்களுக்கு நேரிய மற்றும் சரியான வாய்ப்பை வழங்க வேண்டும். கணிசமான சட்டம் குறித்த எழுவினாவை வனையாமல் மேல்முறையீட்டில் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் கடமைகளை கைவிடுதல் மற்றும் துறத்தலுக்கு ஒப்பானது ஆகும். மேலும் கணிசமான சட்டப்பிரச்சினைகள் வனைந்த பிறகு எதிர் தரப்பிற்கு தகுந்த மற்றும் நேரிய வாய்ப்புகள் வழங்காமல் இருப்பது இயற்கை நீதியை மறுத்தலுக்கு ஒப்பானது ஆகும். உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 100யைப் பொறுத்து உயர் நீதிமன்றங்கள் தங்களது அதிகாரத்தை செலுத்தும்போது மேற்கண்ட வகைமுறைகளை கருத்தில் கொள்ள வேண்டும். மேற்கண்ட நடைமுறைகள் பலவழக்குகள் மற்றும் இரண்டாம் மேற்முறையீடுகளில் கருத்தில் கொள்ளப்படாமல் முடிவு செய்யப்படுவது குறித்து எங்களது வருத்தத்தை பதிவு செய்கிறோம்.

27. உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 100ன் கீழ் கணிசமான சட்டப்பிரச்சனைகள் என்ன என்பதை முடிவு செய்வதற்கு பின்பற்றப்படவேண்டிய வழிகாட்டுதல்கள் இந்த நீதிமன்றத்தால் சர் சன்னிலால் வி லால் மேத்தா அன்ட் சன்ஸ்

/எதிர்/ செஞ்சுரி ஸ்பின்னிங் அன்ட் மேனுபேக்சுரிங் கம்பெனி லிமிடெட் [ஏ.ஐ.ஆர். 1962 எஸ்.சி. 1314] என்ற வழக்கில் வழங்கப்பட்டுள்ளன.

28. மேற்சொன்ன சர் சன்னிலால் வி லால் மேத்தா அன்ட் சன்ஸ் என்ற வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு வழங்கிய ரிம்மலபுடி சுப்பாராவ் /எதிர்/ நூனி வீரஜு மற்றும் பலர் [ஏ.ஐ.ஆர். 1951 மெட். 969] என்ற வழக்கின் தீர்ப்பில் எப்போது ஒரு சட்டம் பற்றிய பிரச்சனை சட்டம் பற்றிய கணிசமான பிரச்சனையாக மாறுகிறது என்று குறிப்பிட்டுள்ளதை இந்த நீதிமன்றம் ஒப்புக் கொண்டு அங்கீகரித்துள்ளது.

29. ஹீரோ வினோத் /எதிர்/ சேஷம்மாள் [(2006) 5 எஸ்.சி.சி. 545] என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் மேற்சொன்ன சர் சன்னிலால் வி லால் மேத்தா அன்ட் சன்ஸ் என்ற வழக்கையும் பிற தீர்ப்புகளையும் பின்பற்றி முன்வைக்கப்பட்ட சட்டப்பிரச்சனைகள் சாதாரணமான சட்டப்பிரச்சனைகளா அல்லது கணிசமான சட்டப்பிரச்சனைகளா என்பதை முடிவு செய்து விளக்கி கூறியுள்ளது.

30. மேற்சொன்ன ஹீரோ வினோத் /எதிர்/ சேஷம்மாள் என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பில் தொடர்புடைய பத்திகள் கீழே பகரப்பட்டுள்ளது.

> **'21.** உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 100ன் கீழ் கணிசமான சட்டப்பிரச்சனை உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் எங்கும் விளக்கப்படவில்லை. சட்டம் பற்றிய பிரச்சனை என்பதற்கான விளக்கம் அத்தியாவசியமானது, உண்மையானது, உரக்கச் சொல்வது, முக்கியமானது அல்லது குறிப்பிடத்தக்கது என்பதாகும். அது தொழில்நுட்பத்துடன்

முரண்பட்டு நிற்பது அல்லது எந்தவிதமான பொருளோ விளைவோ இல்லாதது அல்லது வெறுமனே அறிவு செறிந்த வார்த்தை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் சட்டத்தின் 109வது பிரிவு அல்லது அரசியலமைப்புச் சட்டம் கட்டளை 133(1)(a) ஆகிய விதிகளில் கூறப்பட்டுள்ள பொதுமுக்கியத்துவம் வாய்ந்த என்ற பதத்தை பின்னொட்டாக சேர்ப்பதன் மூலம் கணிசமான சட்டப்பிரச்சனை என்பதை தேர்வு செய்யக்கூடாது என சட்டமன்றம் முடிவு செய்துள்ளது. இரண்டாவது மேல்முறையீட்டில் முடிவு செய்யப்படும் கணிசமான சட்டப்பிரச்சனை என்பது பொதுவான முக்கியத்துவம் வாய்ந்த சட்டப்பிரச்சனையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. குரான்தித்தா /எதிர்/ ராம்தித்தா 55IA 235 : AIR 1928 PC 172] என்ற வழக்கில் கணிசமான சட்டப்பிரச்சனை என்ற சொல் அப்போதைய உரிமையியல் நடைமுறைச் சட்டபிரிவு 100ன் கடைசிப் பிரிவில்(திருத்த சட்டத்தால் தவிர்க்கப்பட்டதால்) பயன்படுத்தப்பட்டுள்ளது. சர் சன்னிலால் வழக்கு [1962 Supp (3) SCR 549 : AIR 1962 SC 1314] வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு ரிம்மலபுடி சுப்பாராவ் /எதிர்/ நூனி வீரஜு[AIR 1951 Mad 969:(1951) 2 MLJ 222 (FB)] :(சர் சன்னிலால் வழக்கு [1962 Supp (3) SCR 549 : AIR 1962 SC 1314], SCR p.557) என்ற வழக்கில் வெளியிட்ட கருத்தை பின்பற்றுவதற்கு இந்த நீதிமன்றத்தின் முழு அமர்வு உடன்பட்டது.

> "சட்டம்பற்றிய பிரச்சனை நேரிய விவாதத்திற்கு உட்பட்டதா? அது குறித்து மாறுபட்ட கருத்துகள் எழுவதற்கு வாய்ப்பு உள்ளதா? அல்லது நீதிமன்றம் மேற்படி சட்டப்பிரச்சனைகள் குறித்து ஆழமாகவும், வேறுபட்ட வழியில் விவாதிக்க வேண்டும் என்று முடிவு செய்தாலோ மேற்படி சட்டப்பிரச்சனை கணிசமான சட்டப்பிரச்சனையாக உருவெடுக்கும். மறுபுறம் மேற்படி சட்டம் பற்றிய பிரச்சனை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் முடிவு செய்யப்பட்டிருந்தாலோ அல்லது மேற்படி கேள்வியை தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படவேண்டிய பொதுவான கொள்கைகள் நன்கு தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் மேற்படி கொள்கைகளை பொருந்தச் செய்வது மட்டுமே நோக்கமாக இருப்பின் மேற்படி பிரச்சனை கணிசமான சட்டப் பிரச்சனை என எடுத்துக் கொள்ளப்படாது".

31. வழக்கில் எழுப்பப்படும் சட்டப்பிரச்சனை கணிசமானதா என முடிவு செய்ய அது பொது முக்கியம் வாய்ந்ததா, தரப்பினர்களின் உரிமைகளை கணிசமாகவும், நேரடியாகவும் பாதிக்கிறதா, அவ்வாறு பாதித்தால் அது வெளிப்படையான கேள்வியை உள்ளடக்கி இறுதியாக இந்த நீதிமன்றத்தால் முடிவு செய்யாமல் உள்ளதா என்பதை கண்டறிய வேண்டும். மேற்படி சட்டப்பிரச்சனை உச்ச நீதிமன்றத்தால் தீர்க்கப்பட வேண்டி இருந்தாலோ அல்லது மேற்படி சட்டப்பிரச்சனையை முடிவு செய்ய பொதுவான கோட்பாடுகளை பயன்படுத்த வேண்டி இருந்தாலோ, பொதுமுக்கியத்துவம் வாய்ந்த கேள்வியாக இருந்தாலோ அல்லது எழுப்பப்பட்ட சட்டம் சார்ந்த பிரச்சனை

அபத்தமானதாக இருந்தாலோ அது கணிசமான சட்டம் சார்ந்த பிரச்சனையாக இருக்காது.

32. பிரச்சனை கணிசமானதாக இருப்பதற்கு அது விவாதத்திற்குரியதாக இருக்க வேண்டும், வழக்கின் தீர்ப்புகளாலோ அல்லது சட்டங்களாலோ கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கக்கூடாது. மேற்படி பிரச்சனை தரப்பினர்களின் உரிமைகளைப் பொறுத்து எந்த வழியில் தீர்வு செய்யப்பட்டாலும் வழக்கின் தீர்ப்பின் முக்கியமான பொருண்மை சம்பந்தப்பட்டதாக இருக்க வேண்டும். கணிசமான பிரச்சனையாக இருப்பதற்கு முதலில் வாதுரையில் அடிப்படையான அடித்தளம் அமைந்திருக்க வேண்டும். மேற்படி பிரச்சனை நீதிமன்றத்தின் முடிவுகளிலிருந்து வெளிப்பட்டிருக்க வேண்டும். அடிப்படையான பிரச்சனையை உள்ளடக்காத உயர் நீதிமன்றத்தில் முதல் முறையாக எழுப்பப்படும் புதிய கருத்துகள் அவ்வழக்கோடு சம்பந்தப்பட்ட கருத்துகள் அல்ல. எனவே இவ்வழக்கில் எழுப்பப்படும் சட்டப்பிரச்சனை கணிசமானதா, இந்த வழக்கோடு சம்பந்தப்பட்டதா என்பதை முடிவு செய்ய நீதி வழங்குவதற்கான இன்றிமையாததாக கடமை மற்றும் துண்டுதலுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்த வேண்டியது அவசியமானது மட்டுமின்றி எந்த ஒரு வழக்கிலும் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க வேண்டியதும் இன்றியமையாததாகும்(**சந்தோஷ் ஹசாரி /எதிர்/ புருசோத்தம் திவாரி [(2001) 3 எஸ்.சி.சி. 179]** என்ற வழக்கை பார்க்க).

33. உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 100யை பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

(i) ஆவணங்களின் உள்ளடக்கம் மற்றும் அதில் எழுதப்பட்ட சங்கதிகள் குறித்து செய்யப்படும் அனுமானங்கள் பொருண்மை சார்ந்த பிரச்சனைகள் ஆகும். ஆனால் மேற்படி ஆவணங்களின் சட்டவிளைவு குறித்த பிரச்சனைகள் சட்டப்பிரச்சனைகள் ஆகும். சட்டத்தின் கோட்பாட்டை பயன்படுத்தி உருவாக்கப்படும் ஆவணங்கள் குறித்த பிரச்சனைகளும் சட்டப்பிரச்சனைகள் ஆகும். எனவே ஒரு ஆவணத்தை தவறாக கட்டமைத்தாலோ அல்லது ஒரு ஆவணத்தை உருவாக்கும்போது சட்டத்தின் கோட்பாடுகளை தவறாக பயன்படுத்தினாலோ சட்டம் பற்றிய பிரச்சனை எழுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

(ii) உயர்நீதிமன்றங்கள் ஒரு வழக்கில் சட்டம் பற்றிய பிரச்சனை மட்டுமே எழாமல் கணிசமான சட்டம் பற்றிய பிரச்சனை எழுந்துள்ளதா என்பதைக் கவனித்து உளநிறைவு கொள்ள வேண்டும். ஒரு வழக்கின் முக்கியமான பிரச்சனை(தரப்பினர்களை பாதிக்கும் கேள்வி அல்லது பதில்) குறித்து எழும் சட்டப்பிரச்சனை, அது பிற குறிப்பிட்ட சட்டங்களால் பாதுகாக்கப்பட்டிருந்தாலோ, பாதுகாக்கப்படாமல் இருந்தாலோ அல்லது முன் தீர்ப்புகளால் முடிவு செய்யப்பட்ட சட்ட கோட்பாடுகளை உள்ளடக்கியதாக இருந்தாலோ, மேலும் அது விவாதத்திற்குட்பட்ட சட்ட பிரச்சனைகள் கொண்டிருந்தாலும் அது கணிசமான சட்டப்பிரச்சனையாக உருவெடுக்கும். மேலும் வெளிப்படையான சட்டம் அல்லது கட்டுப்படுத்தக்கூடிய முன் தீர்ப்புகளின் அடிப்படையில் ஒரு சட்டக்கருத்து தெளிவாக

விளக்கப்பட்டிருந்து, கீழமை நீதிமன்றம் அதை புறக்கணித்திருந்தாலோ அல்லது அந்த சட்டக்கருத்திற்கு எதிராக செயல்பட்டிருந்தாலோ ஒரு கணிசமான சட்டப்பிரச்சனை எழும். இரண்டாவதாக சொல்லப்பட்ட வழக்குகளில் மேற்படி பிரச்சனை விவாதத்திற்கு உட்பட்டது என்ற காரணத்தினால் அல்லாமல் முடிவு செய்யப்பட்ட சட்டக்கருத்தை மீறுவதாக அமைந்துள்ள காரணத்தினால் கணிசமான சட்டப்பிரச்சனை எழும்.

(iii) கீழமை நீதிமன்றங்களின் பொருண்மை சார்ந்த முடிவுகளில் உயர் நீதிமன்றங்கள் தலையிடுவதில்லை என்பது பொதுவான கருத்தாகும். ஆனால் அது இறுதியான கருத்து அல்ல. அது குறித்து முடிவாக அறியப்பட்ட விதிவிலக்குளான (i) கீழமை நீதிமன்றம் சமர்ப்பிக்கப்பட்ட முக்கியமான சாட்சியத்தை புறக்கணித்தல் அல்லது சாட்சியம் இல்லாத நிலையில் முடிவு செய்வது, (ii) நிரூபிக்கப்பட்ட பொருண்மைகளின் மீது சட்டத்தை தவறாக பயன்படுத்தி தவறான அனுமானத்தை செய்வது; அல்லது (iii) நிரூபிக்கும் சுமையை தவறாக சுமத்துதல். சாட்சியம் இல்லாத நிலையில் ஒரு வழக்கை முடிவு செய்வது என்று நாங்கள் வலியுறுத்துவது சாட்சியம் இல்லாத வழக்குகளை மட்டும் குறிப்பதல்ல, மாறாக சாட்சியம் முழுவதுமாக பதிவு செய்யப்பட்டிருந்தாலும் வழக்கில் சொல்லப்பட்ட முடிவை ஆதரிக்கும் விதமாக இல்லை என்ற வழக்குகளையும் குறிக்கும்.

34. இந்த வழக்கில் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் சாட்சியம் இல்லாமல் செயல்பட்டுள்ளது என்று சொல்லும்விதமாக செயல்படவில்லை. இவ்வழக்கின் எதிர்

மனுதாரர்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இரண்டாம் மேல் முறையீட்டில் தாங்கள் தாக்கல் செய்த முக்கியமான சாட்சியங்களை முதலாம் மேல் முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்து விட்டது என்பதாக வாதம் எதையும் முன் வைக்கவில்லை. அதேபோலவே எதிர் மனுதாரர்கள் முதலாம் மேல் முறையீட்டு நீதிமன்றம் சட்டத்தை நிரூபிக்கப்பட்ட பொருண்மைகள் மீது தவறாக பயன்படுத்தி தவறான அனுமானத்தை செய்துள்ளதாக காட்டவில்லை.

35. இந்த வழக்கில் மேற்கண்டவாறு செய்யப்பட்ட முடிவுகளின்படி அசல்வாதி மற்றும் பிரதிவாதிகள் சார்பாக சாட்சியங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை கவனமாக பரிசீலனை செய்து விசாரணை நீதிமன்றம் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது தத்தெடுப்பு நடந்து 34 ஆண்டுகளுக்கு பிறகு பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களில் உள்ள முக்கியம் இல்லாத சிறு குறைபாடுகள் மற்றும் நிலையற்ற தன்மையின் அடிப்படையில் முடிவு செய்து தவறிழைத்துள்ளது. முதல் மேல் முறையீட்டு நீதிமன்றம் சுட்டிக்காட்டிய காரணங்களில் தலையிடக்கூடிய அளவுக்கான குறைபாடுகள் எதுவும் காணப்படவில்லை.

36. மேல்முறையீட்டு உரிமை தன்னிச்சையானது அல்ல. மேல்முறையீட்டு உரிமை சட்டத்தால் வழங்கப்பட்டதாகும். கணிசமான சட்டப்பிரச்சனை கொண்ட வழக்குகள் மட்டுமே மேல்முறையீட்டிற்கு உகந்தது என்று சட்டம் கட்டுப்பாடுகள் விதித்துள்ள நிலையில், இந்த நீதிமன்றத்திற்கு முதலாம் மேல் முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்த பொருண்மை பற்றிய சங்கதிகளைப் பொருத்து மேல்முறையீட்டில் முடிவு செய்ய அவசியம் ஏற்படவில்லை.

37. உயர்நீதிமன்றத்தின் முன்பு எழுப்பப்பட்ட வினாக்கள் இந்த நீதிமன்றம் கணிசமான சட்டப்பிரச்சனை குறித்து முடிவு செய்ய வழங்கிய வழிமுறைகளின்படியானது அல்ல. எனவே இந்த இரண்டாவது மேல்முறையீட்டில் சட்டப்பிரச்சனையோ, கணிசமான சட்டப்பிரச்சனையோ இல்லை என்று முடிவு எடுக்க கட்டுப்படுத்தப்பட்டுள்ளோம்.

38. மேலே விவாதிக்கப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில் இம்மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. கேள்விக்கு உட்படுத்தப்பட்ட தீர்ப்பும், தீர்ப்பாணையும் தள்ளுபடி செய்யப்படுவதோடு, முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் உரிமையியல் மேல்முறையீடு எண்.361/1984ல் வழங்கிய தீர்ப்பும், தீர்ப்பாணையும் மீட்டமைக்கப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."